**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.97** **நாள்: 25.07.2016**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொசு ஒழிப்புப்பணிகள் தீவிரம் !**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் ஆணையாளர் முனைவர். தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத் துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி 426 சதுர கிலோமீட்டராக விரிவாக்கம் செய்யப்பட்ட பின்னர் கொசுக்களினால் ஏற்படும் மலேரியா, டெங்கு, யானைக்கால் நோய், மூளைக் காய்ச்சல், உண்ணிகளால் பரவக்கூடிய (Scrub typhus) தோல் நோய் போன்ற நோய்களை தடுக்கும் வகையில் அனைத்து விதமான பூச்சி தடுப்பு முறைகளை மேலும் செம்மைப்படுத்தும் விதமாக பூச்சி தடுப்பு கண்காணிக்கும் மையம் அமைக்கப்பட்டு (Vector Control Monitoring Centre) செயல்பாட்டில் உள்ளது.

கைத்தெளிப்பான் (Sprayers) புதியதாக 150 எண்ணிக்கையிலும், கையில் கொண்டு செல்லும் சிறிய புகைப்பரப்பும் இயந்திரம் 150 எண்ணிக்கையிலும் கொள்முதல் செய்யப்பட்டு, கொசு ஒழிப்பு களப்பணியில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சுகாதாரத்துறை மலேரியா பிரிவில் கொசு ஒழிப்பு பணிக்கு கூடுதலாக 16 களப்பணி உதவியாளர்களை புதியதாக நியமித்தும், 3 இளநிலை பூச்சியியலர்களுக்கு முதுநிலை பூச்சியியலராக பதவி உயர்வும் வழங்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டலங்களில் உள்ள ஒவ்வொரு நீர்வழிப்பாதைகளின் வண்ண வரைபடம் (GPS Mapping) தயாரிக்கப்பட்டு, அதன்பொருட்டு ஒவ்வொரு மண்டலங்களிலும் தனிக்குழுக்கள் அமைத்து தீவிர கொசு ஒழிப்புப் பணிகள் நடைபெற்று வருகிறது. அனைத்து நீர்வழிப்பாதைகளில் கொசுப்புழு நாசினி தெளிக்கும் பணியை மேற்கொள்வதற்காக 15 எண்ணிக்கையில் ஃபைபர் படகு (Fiber Boat) கொள்முதல் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டலங்களில் காணப்படும் நன்னீர் குட்டை / குளங்கள் / ஏரிகள் மற்றும் நீர்தேக்கங்கள் ஆகியவை வண்ண வரைபடமாக (GPS Mapping) தயாரிக்கப்பட்டு அவற்றில் கொசுப்புழுக்களை உண்ணும் கம்பூசியா மீன்களை விடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் 15 மண்டலங்களிலும் மேற்கொள்ளப்பட்ட கொசு ஒழிப்பு பணியின் சீரிய முயற்சிகளின் காரணமாக, கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் கொசுத்தொல்லை புகார்கள் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது.

**செய்தி வெளியீடு : மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி**